# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 144/10 — 1975 ජනවාරි 01 වැනි බදාදා — 1975.01.01

144/10 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு சனவரி மாதம் 01 ந் திகதி புதன்கிழமை

( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.அ.எண் : எக்ஸ் 37/66

**மாநகரசபைகள் கட்டளைச் சட்டம்**

கட்டளை

1974 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 277 ஆம் பிரிவின் (2) (அ) என்னும் உட்பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, சனாதிபதி, வில்லியம் கொப்பல்லவ ஆகிய நான், கண்டி மாநகரசபை சம்பந்தமான விசேட ஆணையாளர்களின் நியமனம்பற்றி, 1970 செத்தெம்பர் 14 ஆந் தேதிய 4923/2 ஆம் இலக்க அதிவிசேடக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையால் திருத்தப்பட்டவாறானதும், 1970 செத்தெம்பர் 4 ஆந் தேதிய 14,921/6 ஆம் இலக்க அதிவிசேடக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதுமான கட்டளையை, " கண்டி சிறு நிலக்கமக்காரர் புனர்வாழ்வுப் பகுதியின் ஆணையாளர் திரு. முத்துபண்டார சமரக்கோன் அவர்களை விசேட ஆணையாளராக " என்னும் சொற்களுக்குப் பதிலாக " திரு. அபயரத்ன பண்டா தமுனுபொல அவர்களை விசேட ஆணையாளராக " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இக்கட்டளையினால் மேலும் திருத்துகிறேன்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

கண்டி, 1975 சனவரி மீ 1 ந் உ.

1–306

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.